**இந்தியாவின் நிதி உதவியின் கீழ் குருனாகல**
**பிங்கிரியவில் அமைக்கப்பட்ட மொழி ஆய்வுகூடத்தின் அங்குரார்ப்பணம்**
**2014 ஒக்ரோபர் 11**

2014 ஒக்ரோபர் 11ம் திகதியன்று கௌரவ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், கௌரவ கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்கள் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் திரு. வை. கே. சிங்ஹா அவர்கள் ஆகியோர் வயம்ப தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெற்ற வைபவமொன்றில் பிங்கிரியாவின் மொழி ஆய்வு நிலையத்தை, இணைந்து அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர் ஜனாதிபதி ஆலோசகர் திரு.சுனிமல் பெர்னாண்டோ, மத்திய மாகாண அங்கத்தவர்கள் மற்றும் பல சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்

இந்த வைபவத்தில் உரையாற்றிய கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் கல்வித் துறையில் இந்தியா அளித்துவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார். இந்திய உயர் ஸ்தானிகர் மூன்றாவது மொழி ஆய்வு கூடத்தின் அங்குரார்ப்பணத்தை வரவேற்றதோடு இலங்கையின் அபிவிருத்தியில் தொடரும் இந்தியாவின் பங்களிப்பை வலியுறுத்தினார். இந்த வகையில் வீடமைப்பு, உட்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடித்துறை, கைத்தொழில், கைப்பணி மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளில் இந்தியாவின் உதவித்திட்டம் 1.63 அமெரிக்க டொலர் பெறுமதியானது எனக் குறிப்பிட்டார்.

பிங்கிரியா வில் அமைக்கப்பட்ட மொழி ஆய்வு நிலையமானது இந்தியாவினால் இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் அமைக்கப்படும் மொழி ஆய்வு நிலையங்களில் ஒன்றாகும். மேல் மாகாணத்தில் கம்பகாவிலும் மத்திய மாகாணத்தில் கண்டியிலும் இரு மொழி ஆய்வு நிலையங்கள் ஏற்கெனவே அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன. மொழி ஆய்வு நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் ஏனைய இடங்களாவன, கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, ஊவா மாகாணத்தில் பதுளை, வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் ,தென் மாகாணத்தில் மாத்தறை, வட மத்திய மாகாணத்தில் பொலன்னறுவை, சபரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி ஆகிவையாகும். இலங்கையில் மூன்று வரிசை ஆங்கிலமொழிப் பயிற்சி முறையை அமைக்கும் திட்டத்திற்காக 2011ல் இந்தியாவுக்கம் இலங்கைக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றின் ஒரு பகுதியாவே மொழி ஆய்வுத் செயற்றிட்டம் அமுல் படுத்தப்படுகின்றது. கொழும்பிலுள்ள வரையறுக்கப்பட்ட மெற்றோபொலிற்றன் தனியார் நிறுவனத்திற்கூடாகச் செயற் படுத்தப்படும் இத்திட்டத்திற்காக இலங்கை ரூபாய் 84 மில்லியனை இந்தியா நன்கொடை உதவியாக வழங்குகின்றது. இச் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய அரசு ஒவ்வெரு நிலையத்திற்கும் 30 கணனிகளையும் அத்துடன் சம்பந்தப்பட்ட உபகரணங்களான மென்பொருள், அதி நவீன கற்றல் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கியதுடன் ஐந்து தலைமைப் பயிற்றுவிப்பாளர்களுக்கும் பயிற்சியளித்துள்ளது.

இச்செயற்றிட்டத்தின் நோக்கமானது இலங்கையிலுள்ள ஆங்கில மொழிப் பயிற்சி உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தலாகும். அத்துடன் பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் ஆங்கில மொழி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதும் அவர்களின் திறமைகளை மேம்படுத்துவதுடன் சமுதாயத்தின் பல்வேறுபட்ட தரப்பினரின் பொதுவான ஆங்கில மொழியறிவை அதிகரிப்பதுமாகும்.

இலங்கையுடனான அபிவிருத்திப் பங்களிப்பில் இந்தியா கல்விக்கு முதலிடம் வழங்கியுள்ளது. இலங்கை முழுவதிலுமுள்ள மாணவர்கள் அவர்களுடைய இரண்டாந்தர மற்றும் உயர் கல்வியை இந்தியாவிலும், இலங்கையிலும் தொடர்வதற்கு வேண்டிய உதவியாக 790 புலமைப் பரிசில்களை ஒவ்வொரு ஆண்டும் வழங்குகின்றது. கல்வித்துறைக்கான ஏனைய செயற்றிட்டங்களாவன, கிழக்கு, மேல், மற்றும் தென் மாகாணங்களில் 40 நனசலாக்களை (மின் கற்றல் நிலையங்கள்) அமைத்தல், கிளிநொச்சியில் விவசாய மற்றும் எந்திரவியல் பீடங்களை அமைத்தல், மாத்தறையிலுள்ள றுஹுணு பல்கலைக் கழகத்தில் ரவீந்திரநாத் தாகூர் கேட்போர் கூடமொன்றை அமைத்தல் கிளிநொச்சி. வவுனியா, மற்றும் முல்லைத்தீவில் போரினால் சேதமாக்கப்பட்ட 79 பாடசாலைகளைப் புனரமைத்தல், கிழக்கு மாகாணத்திலுள்ள 500 பாடசாலைகளுக்கு 1260 கணனிகளையும். 218 லேசர் பிரின்டர்களையும் வழங்கியமை, திருகோணமலையில் சித்த ஆயுர்வேத வளாகமொன்றை நிறுவியமையும், பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு உதவும் முகமாகக் கல்வி நிலையங்களுக்கு 110 பஸ் வண்டிகளை வழங்கியமையுமாகும்.

* * * * *